**செ. கு. எண்**: 368 **நாள்**: 17.10.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 17.10.2012

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், சிங்கப்பெருமாள் கோயிலைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவர் 7.10.2012 அன்று திருப்பெரும்புதூர் சந்திப்பு அருகில் சாலையைக் கடக்கும் போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், இளையாவயல் கிராமம், திருச்சிராப்பள்ளி - புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் 13.10.2012 அன்று புதுக்கோட்டையிலிருந்து கீரனூர் சென்றுகொண்டிருந்த அரசுப் பேருந்து, பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த இளையாவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு.கருப்பையா என்பவரின் மகன் ரெங்கசாமி மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, அம்பத்தூர், திருவேங்கடம் நகரைச் சேர்ந்த திரு. ராஜசேகர் என்பவரின் மகன் திரு. ஆகாஷ் 14.10.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம் கிராமத்தில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 15.10.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், வடவம்பாடி கிராமம், மஜ்ரா போலமடை அருகில், பஞ்சப்பட்டி – சேங்கல் பிரதான சாலையில் 16.10.2012 அன்று இரு சக்கர வாகனமும், அரசுப் பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மஜ்ரா பூலாம்பட்டியைச் சேர்ந்த திரு. பழனியப்பக் கவுண்டர் என்பவரின் மகன் திரு. முருகேசன் மற்றும் மஜ்ரா

கோணிச்சிப்பட்டியைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் திரு. சண்முகம் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துக்களில் அகால மரணமடைந்த திரு. சுந்தரம். திரு. ரெங்கசாமி, திரு. ஆகாஷ், திரு. முருகேசன் மற்றும் திரு. சண்முகம் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் திரு. மின்பகதூர் என்பவரின் மகன் திரு. லோகு குமார் காயமடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் அவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், அவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திரு. சுந்தரம், திரு.ரெங்கசாமி, திரு. ஆகாஷ், திரு. முருகேசன் மற்றும் திரு. சண்முகம் ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் காயமடைந்த திரு. லோகு குமாருக்கு 10,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**